முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண். 68/2019

நாள். 21.06.2023 வா.சா.1 – திருமதி. ஜெயா

த/பெ - திரு. தங்கசாமி நாடார்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு,

8 முதல் 10 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

1) எனது அப்பா பெயர் தங்கசாமி நாடார். அவருக்கு 8 பிள்ளைகள், 4 ஆண்கள் ராஜன், செல்வன், செல்வராஜ், ஜான்சன். 4 பெண்கள் மல்லிகா, சந்திரபாப்பா, ஜான்ஸி மற்றும் நான் ஜெயா ஆகும். மல்லிகாவிற்கு எத்தனை வருடத்திற்கு முன்பு திருமணம் நடந்தது என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. அவருக்கு ஒரு மகள் உள்ளார். மகளுக்கு தற்போது 24 வயதிருக்கும். சந்திரபிரபாவிற்கு திருமணம் முடிந்து எத்தனை ஆண்டுகள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 ஆண் பிள்ளைகள் ஆகும். ஜான்ஸிக்கு ஒரு மகன் உள்ளார் அவருக்கு 24 வயதிருக்கும். எனக்கு 2003 ல் திருமணம் நடைபெற்றது. எந்த ஊரில் என்னை திருமணம் செய்து கொடுத்தார்கள் என்றால் எங்கள் ஊருக்கு பக்கத்து ஊரான தர்மலிங்கபுரம் ஆகும்.

2) எனது அப்பா 2007 ல் இறந்து விட்டார். எனது திருமணத்தின் போது நகை, ரொக்கம் கொடுத்து திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனக்கு கம்மியாகத் தான் நகை போட்டார்கள். திரும்பி வாங்கி கொண்டார்கள். எங்கள் ஊர் ஜாதி வழக்கப்படி எனது அப்பாவின் தகுதிக்கு தகுந்தாற் போல் தான் நகை போட்டு திருமணம் செய்து வைப்பார்கள் என்றால் எனக்கு நகை எதுவும் போடவில்லை. உங்கள் திருமணம் சமயத்தில் எட்டில் ஒரு பங்கு என்ற அடிப்படையில் தான் உங்களுக்கு நகை போட்டு திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் எனக்கு நகை எதுவும் போடவில்லை. அதில் உங்கள் அண்ணனுடைய சுய சம்பாத்திய பணமும் உண்டு என்றால் இல்லை., எனது அப்பாவின்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.06.21 17:35:37 +0530

தொகை மட்டும் தான் உண்டு. எனது அப்பா ஆடு வியாபாரமும் மற்றும் விவசாயமும் செய்து வந்தார். வழக்கு சொத்தின் எல்கைகள் எனக்கு தெரியும் என்றால் முழுவதும் எனக்கு தெரியாது. ஞாபகம் இல்லை.

3) உங்களது 4 அண்ணன்மார்களும், உங்களது அப்பாவும் சேர்ந்து விவசாயம் மற்றும் ஆடு வியாபாரம் செய்து அதன் சம்பாத்தியத்தில் தான் உங்களது திருமணம் செய்து வைத்தார்கள் என்றால் சரியல்ல. உங்களது அண்ணன் 4 பேரும், அம்மாவும் தற்போது உயிருடன் உள்ளார்கள் என்றால் உயிருடன் உள்ளார்கள். உங்களது அப்பா இறந்த பிறகு வா.சா.ஆ.3 பாகப்பத்திரம் ஏற்படுத்திக் கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. நீங்களும் மற்ற 3 சகோதரிகளும் சேர்ந்து தான் வா.சா.ஆ.3 பாகப்பத்திரம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2012 ல் ஏற்பட்டா வா.சா.ஆ-3 ஆவணத்தை குறித்து தற்போது வரை நீங்கள் கேள்வி கேட்கவில்லை என்றால் எனக்கு பத்திரம் ஏற்படுத்திய விவரம் எனக்கு தெரியாது.

4) பத்திரம் ஏற்படுத்திக் கொண்ட விவரம் எப்போது தெரிய வந்தது என்றால் நான் ஊருக்கு வந்த போது தெரிய வந்தது. தேதி, வருடம் தெரியுமா என்றால் ஞாபகம் இல்லை. உங்கள் தாயார் மற்றும் சகோதரர்களை பார்த்து பேசும் பழக்கம் உண்டா என்றால் உண்டு. உங்கள் தாயார் என்ன கூறினார்கள் என்றால் ஒன்றும் கூறவில்லை. உங்கள் தாயார் உங்களுக்கு நகை போட்டு திருமணம் செய்து வைத்ததால் சொத்தில் நீங்கள் பங்கு கேட்க கூடாது என்று கூறினார்கள் என்றால் அவ்வாறு அம்மா கூறவில்லை. சகோதரர்கள் தான் கூறினார்கள். உங்களுக்கு என்ன பண்ண முடியுமோ பண்ணிக் கொள்ளுங்கள் என்றும் சொத்தில் பங்கு கிடையாது என்று கூறினார்கள்.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.06.21 17:35:44 +0530

5) உங்கள் அக்காவின் திருமணத்தின் போது சொத்தின் மதிப்பு குறைவாக இருந்தது என்றும் தற்போது அதிகமாக சொத்து மதிப்பு அதிகமாக உள்ளதால் நான் வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. உங்கள் தாயார் நீங்கள் வழக்கு நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டாம் என்றும் உங்களுக்கு நல்லபடியாக திருமணம் செய்து வைத்தார்கள் என்றும் அதையும் மீறி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வழக்கு நடக்கும் போது போன வருடம் உங்களிடம் உங்கள் சகோதரர்கள் மற்றம் தாயார் சமாதானம் பேசினார்கள் என்றும் வழக்கின் செலவு தொகையை மட்டும் கொடுக்குமாறு ஒத்துக் கொண்டேன் என்றால் சரியல்ல. உங்கள் சகேதாரர்களை கஷ்டப்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தில் தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உங்கள் அண்ணனின் மனைவி உங்களுக்கு போட்ட நகைகளை எல்லாம் பெற்றுக் கொண்டார்கள் என்று கூறினீர்கள். அது எந்த அண்ணன் என்றால் செல்வராஜ் ஆகும். எத்தனை பவுன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. நீங்கள் கூறியது போது உங்களின் அண்ணன் மனைவி நகையை வாங்க வில்லை என்றும் வழக்கிற்காக வாங்கி விட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

6) நீங்கள் வழக்கில் கூட்டு அனுபவத்தில் உள்ளதாக கூறியுள்ளீர்கள் அது பொய் என்றும் 2012 ம் வருடத்திலேயே பாக பிரிவினை செய்து கொண்டு அவரவர் பாகத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பாகப்பிரிவினை அடிப்படையில் கிடைத்த சொத்தை தான் உங்கள் சகோதரர்கள் 10 ம் பிரதிவாதி சுபாஷ்கர், 11 ம் பிரதிவாதி செல்வன், 9 ம் பிரதிவாதி திலகர், 8 ம் பிரதிவாதி பாரதி ஆகியோர்களுக்கு சொத்தை விற்றுள்ளார்கள் என்றால் அவர்கள் விற்றதை பற்றி எனக்கு தெரியாது. உங்களுக்கு விற்பனை செய்தது சம்மந்தமாக ்தெரியும் என்றும் அதமன் அடிப்படையில் தான் மேற்படி கூறிய பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால்

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.06.21 17:35:51 +0530

சரியல்ல. வழக்கு சொத்தில் 1/2 பாகம் கோரி உள்ளீர்கள். வழக்கு சொத்தானது Equity அடிப்படையில் கிரையம் வாங்கிய நபர்களுக்கு ஒதுக்கப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

7) வழக்கு சொத்தில் நீங்கள் கூட்டு அனுபவத்தில் இல்லை என்றும் வழக்கில் நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் செலுத்திய நீதிமன்ற கட்டணம் தவறானது என்றால் சரியல்ல. வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. உங்கள் சகோதரி சந்திர பாப்பாவை இந்த வழக்கில் சேர்க்கவில்லை என்றால் அவருக்கு எனது சகோதரர்கள் பணம் கொடுத்துள்ளார்கள் அதனால் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை. எவ்வளவு தொகை கொடுத்துள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது. சந்திர பாப்பாவை வழக்கில் கட்சி சேர்க்காத காரணத்தினால் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

J ANNS RAJA Digitally signed by J ANNS RAJA Date: 2023.06.21 17:35:59 +0530